[1980 பிப்ரவரி 11

திரு. சி. ஆறுமுகம்: பொதுவாக என்று குறிப்பிட்டுவிட்டுத் தான் கேள்வியை ஜாக்கிரதையாகக் கேட்கிறேன். கேள்வி கிணத்துக்கடவு பற்றியதாக இருந்தாலும் பொதுவாக பம்புசெட்டுகள் அடிக்கடி பழுதடைந்துவிடுகின்றன, பழுது பார்ப்பதற்கு ஒரு ஒன்றியத்திற்கு ஒரு நபர்தான் வைக்கப்பட்டிருக்கிறார், உடனுக்குடன் பழுது பார்ப்பதற்காக ஒன்றியத்திற்கு 2 அல்லது 3 பேர்களை நியமிக்க ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: திரு. ஆறுமுகத்தின் யோசனையை அரசு பரிசீலிக்கும்.

திரு. ரா. வெங்கிடசாமி என்கிற வெங்கிடு: தலைவரவர்களே. கிணத்துக்கடவு ஒன்றியத்தில் மோட்டார் பம்புசெட் கெட்டுப்போன காரணத்தால் அந்தப் பகுதி மக்களுக்கு தண்ணீர் கிடைப்பதில் கஷ்டம் இருக்கிறது, அப்படித் தண்ணீர் கிடைக்காத மக்களுக்குத் தண்ணீர் கொடுப்பதற்கு மாற்று ஏற்பாடு என்ன?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே. நான் குறிப்பிட்ட நல்லிக்கவுண்டன்பாளையத்தைப் பொறுத்தமட்டில் ஆழ்குழாய்க் கிணற்று பம்புசெட் பழுதடைந்துவிட்டதால், அதற்குப் பக்கத்தில் இன்னொரு கிணறு வெட்டி பம்புசெட் பொறுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஆகவே, பழுது ஏற்பட்டால் அதை சீர் செய்யவோ, மாற்று ஏற்பாடு செய்யவோ அரசு நிச்சயமாக முயற்சி செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வி. கே. கோதண்டராமன்: சார் சோறு இல்லாமல் ஒரு மாதம் கூட சும்மா இருக்க முடியும். குடிக்கத் தண்ணீர் இல்லை என்றால் 2 அல்லது 3 மணி நேரம் கூட தாக்குப்பிடிக்க முடியாது, ஆகவே பழுது ஏற்பட்டுவிட்டால் அந்தந்த பஞ்சாயத்து யூனியன்களே டெண்டர் கால் பார் செய்து, உடனடியாக அதைப் பழுது பார்ப்பதற்கு உத்தரவிடப்படுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: ஆரம்பத்திலேயே பதில் சொல்லி இருக்கிறேன்.

உடையார்பாளையம் நகருக்கு குடிநீர் வழங்கல்.

*வினா எண் 110: திரு. வெ. கருணாமூர்த்தி: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருச்சி மாவட்டம் உடையார்பாளையம் நகரத்திற்கு கொள்ளிடத்திலிருந்து குடிதண்ணீர் கொண்டு வரும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆமெனில் அத்திட்டம் எப்போது ஆரம்பித்து முடிக்கப்படும்?

[1980 பிப்ரவரி 11]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை,

திரு, வெ, கருணாமூர்த்தி : பேரவைத் தலைவரவர்களே, அந்தப் பேரூராட்சி அப்டிப்பட்ட தொகை கட்டுவதற்குத் தயாராக இருப்பதாக ஒரு தீர்மானம் போட்டு அனுப்பப்பட்டிருக்கிறது, மேலும் அருகாமையிலே இருக்கின்ற கிராமங்களுக்கும் குடிநீர் வழங்க வேண்டும் என்றும் அது ''ரூரல் ஸ்கீம்'' என்ற அடிப்படையில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என்ற ஒரு கோரிக்கையும் வைக்கப்பட்டு அதனடிப்படையில் இப்போது இன்வஸ்டிகேஷனில் இருந்து கொண்டிருக்கிறது, ஆகவே, அதையும் இந்த அரசாங்கம் பரிசீலித்து அந்த நகரத்திற்கு குடிநீர் வழங்க ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு, எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே. புதிய திட்டம் பரிந்துரை செய்யப்பட்டு குடிநீர் வழங்கப்பட வேண்டும் என்று அரசுக்கு வந்தால் அரசு அனுதாபத்தோடு பரிசீலித்து ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்,

சங்கராபுரம் தொகுதியில் குடிநீர் வழங்கும் திட்டங்கள்,

*வினா எண் 111: திரு, துரை முத்துசாமி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தென்னாற்காடு மாவட்டம், சங்கராபுரம் தொகுதியில் உள்ள மைக்கேல்புரம் பவுஞ்சிப்பட்டு, பொரசப்பட்டு, மூங்கில் துறைப்பட்டு, அருளம்பாடி மூக்கனூர் ஆகிய இடங்களில் குடிநீர்த் திட்டம் செயல்படுத்த அனுமதிக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில் விபரம் என்ன :

மாண்புமிகு திரு, எஸ், இராகவானந்தம்: (அ) & (ஆ) பொரசபட்டு, அருளம்பாடி ஆகிய இரு சிற்றூர்களுக்கு மட்டும் குடிநீர்த் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு அருளம்பாடித் திட்டம் நிறைவேற்றப்பட்டு இயங்கி வருகிறது, பொரசப்பட்டுத் திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது, இதர நான்கு சிற்றூர்களும் நல்ல குடிநீர் ஆதாரமுள்ள சிற்றூர்களானதால் அவைகளுக்கு குடிநீர் வழங்கும் திட்டம் எதுவும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை.